குறுக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம் 5.35PM

அ.வ.எண் 17/2017 நாள் 03.10.2019 சாமிநாதன், த/பெ.சின்னக்கண்ணு

PW1

1 முதல் 4 , 6முதல்9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எத்தனை சொத்துக்கு வழக்கு போட்டுள்ளேன் என்றால் 1 சொத்துதான். அந்த சொத்தின் சர்வே எண் 210/1பீயில் 596 ச.அடி. மேற்படி சொத்து பாதையாக பயன்படுத்தி வருகிறார்களா என்றால் இல்லை. வழக்கு சொத்து ரோட்டை ஒட்டி கிழக்கே உள்ளதா என்றால் இல்லை மேற்கே உள்ளது. அதற்கு மேற்கே 10ம் பிரதிவாதி உதயகலா இடம் இருக்கிறதா என்றால் ஆமாம். 210/1-டிக்கு நான் வழக்கு போடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் வழக்கு சொத்திற்கு மேற்கே இருக்கிறார்களா என்றால் ஆமாம். பிரதிவாதிகள் பலதலைமுறைகளா அங்கு இருக்கிறார்கள் என்றால் சரிதான். நான் சமீபத்தில்தான் வழக்கு சொத்தை கிரயம் வாங்கினேன் என்றால் 2004ல் கிரயம் வாங்கினேன். அதன்பிறகுதான் சொத்தின் உரிமை, தன்மை தெரியும் என்றால் இல்லை அதற்கு முன்பே தெரியும். நான் யாரிடம் கிரயம் வாங்கினேன் என்றால் கோபால் வேளாளர் மகன் மோகன். அவருக்கு எப்படி கிடைத்தது என்றால் அவரது மூதாதையர் சொத்து. அது சம்மந்தமான மூலபத்திரம் உள்ளதா என்றால் கலெக்டர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திரம் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். என்ன பத்திரம் என்றால் ஆங்கிலேயர் காலத்தில் அந்த இடம் கலெக்டரிடம் பதிவு செய்யப்பட்டது. அந்த பத்திரத்தில் என்ன சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண் இல்லை. வழக்கு சொத்துதான் நான் சொல்லும் பத்திரத்திலுள்ள சொத்து என்பதை தொடர்புபடுத்தும் ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் ஆர்.எஸ்.ஆர், ஆர்.ஓ.ஆர். உள்ளது. அந்த ஆர்.எஸ்.ஆர், ஆர்.ஓ.ஆர்.ல் என்ன எண் குறிப்பிடபட்டுள்ளது என்றால் 210/1. 210/1ன் மொத்த விஸ்தீரணம் சரியாக தெரியாது சுமார் 1 ஏக்கர் இருக்கலாம். நான் வழக்கு போட்டுள்ள 210/1 சொத்தில் நான் உரிமை கோருவது 1 செண்ட்க்கு கூடுதலான இடம் என்றால் 5 குழிக்கு குறையும். அந்த சர்வே எண்ணில் மீதியுள்ள இடங்கள் அனைத்தும் பிரதிவாதிகளின் குடும்பம் வசம் உள்ளது என்றால் சரிதான் நானும் அதில் ஒரே ஆளாக உள்ளேன். தாவா சொத்து தவிர்த்து இன்னொரு சொத்திலும் உரிமை இருப்பதாக சொல்கிறேன் அதன் சர்வே எண் என்னவென்றால் 210/1 ஏ.

1 முதல் 4 , 6முதல்9 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.
மறு விசாரணை இல்லை.
இத்துடன் குறுக்கு விசாணை முடிக்கப்பட்டது.
குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 5.45PM

Sd/- சாமிநாதன்,

*Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct*

Sd/- G. Sathiakumar,
District Munsif, Pattukkottai,(FAC)